செ.வெ.எண்: 153 நாள்: 04.03.2021

**தமிழக சட்டமன்ற தேர்தலையொட்டி கோவிட்-19 முன் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

தமிழக சட்டமன்ற தேர்தலையொட்டி தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி கோவிட்-19 முன் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.03.2021) நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழகத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 06.04.2021 அன்று நடைபெற உள்ளது. வாக்காளர்கள் முகக்கவசம் அணிவதை உறுதி செய்ய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. மேலும் தேர்தல் நாளன்று வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய கோவிட்-19 முன்தடுப்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு கோவிட் நோய் பரவலை தடுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தலை கோவிட் பாதுகாப்பு வழிமுறைகளுடன் நடத்திடும் வகையில் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

வருவாய்துறையினர் கோவிட் தற்காப்பு பொருட்களை வாக்குச்சாவடி மையங்கள் வாரியாக பிரித்து அவற்றை வாக்குச் சாவடி மையங்களுக்கு வாகனங்களில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தல். மேலும் தற்காப்பு பொருட்கள் உரிய நேரத்தில் சென்றடைந்ததா என்பதை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறையினர் வாக்குப்பதிவு மையங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு முகக்கவசம், சானிடைசர், கையுறைகள் போன்ற தேவையான கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுவதை

கண்காணித்து உறுதி செய்யவும், வாக்குச்சாவடி மையங்களில் இருந்து சேகரிக்கப்படும் உயிர் மருத்துவ கழிவுகளை மாவட்ட நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஒப்படைக்கவும், வாக்காளர்களை வெப்பமாணி கொண்டு பரிசோதனை செய்து, சானிடைசர் வழங்குவதற்கு ஒரு வாக்குச்சாவடி மையத்திற்கு 2 தன்னார்வலர்கள், 8 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் மற்றும் வட்டாரத்திற்கு ஒரு பொறுப்பு அலுவலர்களை நியமனம் செய்து அவர்களுக்கு ஆரம்ப சுகாதார அளவில் பயிற்சி வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள் வாக்குச்சாவடி மையங்களை தேர்தல் நாளுக்கு முதல் நாளே தொற்று நீக்கம் செய்தல், தேர்தல் நாளன்று 4 மணி நேரத்திற்கு ஒருமுறை தொற்று நீக்கம் செய்தல், தேர்தல் பணி நிறைவடைந்த பின் வாக்குச்சாவடியினை மீண்டும் முழுமையாக தொற்று நீக்கம் செய்யும் பணியினை மேற்கொள்ளவும், வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்பட்ட உயிர் மருத்துவ கழிவுகளை உடனுக்குடன் பாதுகாப்பாக அகற்றிட பணியாளர்களை நியமனம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உயிர் மருத்துவ கழிவுகளை வாக்குச்சாவடி மையங்களிலிருந்து அப்புறப்படுத்தும் பணியினை மாவட்ட அளவில் கண்காணிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வாக்குச்சாவடி மையங்களில் இருந்துப் பெறப்படும் உயிர் மருத்துவ கழிவுகளை அதற்கென நியமிக்கப்பட்டுள்ள நிறுவனத்திடம் ஒப்படைக்க மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற உள்ள சட்டமன்ற பொது தேர்தலை கோவிட் தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி நடத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், பொது சுகாதார துணை இயக்குநர்கள் மரு.கலைவாணி, மரு.விஜயக்குமார், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**